
பாடம் - 27

# தேவனுடைய தெய்வீகத் திட்டம்

# ஏதேனிலிருந்து வரும் நான்கு ஆறுகள்





## FOUR RIVERS FROM EDEN

For Further Details : Email us : baskar_harvest@yahoo.co.in, baskarharvest@gmail.com
Phone : 97886 19229, 93641 50005

# தேவனுடைய தெய்வீகத்திட்டம்

## ஏதேனிலிருந்து வரும் நான்கு ஆறுகள்




கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர சகோதரிகளே,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும். நமது கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினாலும் உங்களுக்கு கிருபையும், சமாதானமும் உண்டாவதாக.

இன்றைய நாளில் நாம் பார்க்கப் போகிற பாடம், ஏதேனிலிருந்து வெளியே வரும் நான்கு ஆறுகள் குறித்ததாகும். இதைக்குறித்து நாம் வேதத்தில் கூறப்பட்டுள்ளதை வாசிப்போம் -

**ஆதியாகமம் 2: 10-14**

**"தோட்டத்துக்குத் தண்ணீர் பாயும்படி ஏதேனிலிருந்து ஒரு நதிஓடி, அங்கேயிருந்து பிரிந்து நாலு பெரிய ஆறுகளாயிற்று.**
**முதலாம் ஆற்றுக்கு பைசோன் என்றுபெயர். அது ஆவிலா தேசம் முழுவதையும் சுற்றிஓடும். அவ்விடத்திலே பொன் விளையும்.**
**இரண்டாம் ஆற்றுக்கு கீகோன் என்றுபெயர். அது எத்தியோப்பியா தேசம் முழுவதையும் சுற்றிஓடும். மூன்றாம் ஆற்றுக்கு இதெக்கேல் என்று பெயர். அது அசீரியாவுக்கு கிழக்கே ஓடும். நாலாம் ஆற்றுக்கு ஐபிராத்து என்று பேர்".**

நாம் ஏற்கனவே இந்த வேதப்பகுதியை வாசித்திருந்தாலும், இன்றைய நாளில் இதில் மறைந்துள்ள ஆழமான இரகசியங்களை பார்க்கப்போகிறோம்.

- ⇨ **ஏதேனிலிருந்து ஓடிய நதி எதைக் குறிக்கிறது?**
- ⇨ **நாலு பெரிய ஆறுகள், அது ஓடிய தேசம் இவைகளின் அர்த்தம் எதைக் குறிக்கிறது?**
- ⇨ **முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம் ஆறுகளில் மறைந்துள்ள இரகசியங்கள்**

**அதன்மூலம் தேவன் நமக்கு வைத்துள்ள அவருடைய திட்டம் என்ன?**

இவைகளைக் குறித்து நாம் பார்க்கலாம். சத்தியத்தைக் கற்றுவருகிற நாம் ஒவ்வொருவரும் தேவன் தம்முடைய வசனத்தில் அற்புதமான சத்தியங்களை மறைபொருள்களை வைத்துள்ளார் என்பதை அறிவோம்.

**உபாகமம் 29:29**

**"மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள். வெளிப்படுத்தப்பட்டவைகளோ..."**

மறைவானது கர்த்தருடையது.ஆனால் அவருடைய பெரிதான கிருபையினால் நமக்கு தேவனுடைய தெய்வீகத் திட்டத்தின் மூலம் அவருடைய பொக்கிஷங்களை வெளிப்படுத்துகிறார்.

இன்றைக்கும் இவ்வேதப் பகுதியில் மறைந்துள்ள சத்தியங்களை குறித்து நாம் பார்க்கலாம்.

## ஏதேனிலிருந்து ஓடிய நதி - விளக்கம்

**ஆதியாகமம் 2:10**

**"தோட்டத்திற்குத் தண்ணீர் பாயும்படி ஏதேனிலிருந்து ஒரு நதி ஓடி, அங்கேயிருந்து பிரிந்து நாலு பெரிய ஆறுகளாயிற்று"**

இங்கு ஏதேனிலிருந்து ஒரு நதி வெளியேறுவதைப் பார்க்கிறோம். நதி என்றால் தண்ணீர் நிறைந்து ஓடுவது நதிஆகும். வேதத்தில் தேவன் தம்முடைய வார்த்தைகளை நேரடியான பாஷையிலும் , மறைமுக பாஷையிலும் விளக்குகிறார் என்று நாம் அறிவோம். ஆகையால் தேவனுடைய வார்த்தையில் தண்ணீர்கள் என்பது எதைக்குறிக்கும்? இதற்கான பதிலை நாம் வாசிப்போம்

**வெளிப்படுத்தல் 17:15**

**"பின்னும் அவர் என்னை நோக்கி - அந்த வேசி உட்கார்ந்திருக்கிற தண்ணீர்களைக் கண்டாயே. அவைகள் ஜனங்களும் கூட்டங்களும் ஜாதிகளும் பாஷைக்காரருமாம்"**

இந்த வசனத்தின் மூலமாக "தண்ணீர்" என்பது ஜனங்கள் ஜாதிகள் பாஷைக்காரர் என்று அறிகிறோம். இது ஒட்டுமொத்தமான மனித ஜாதியைக் குறிக்கிறது. அப்படியானால், ஒட்டுமொத்த மனித ஜாதியும் ஏதேனிலிருந்து புறப்பட்டார்களா? இதற்கு பதிலை கீழ்க்காணலாம்.

**ஆதியாகமம் 3:23,24**

**"அவன் (ஆதாம்) எடுக்கப்பட்ட மண்ணைப் பண்படுத்த தேவனாகிய கர்த்தர் அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பிவிட்டார்"**

**அவர் மனுஷனைத் துரத்திவிட்டு..** இந்த வசனத்திலிருந்து "ஏதேனிலிருந்து வெளியே வந்த நதி" ஆதாம் ஏவாள் மற்றும் அவர்களிலிருந்து தோன்றிய முழு மனுக்குலத்தையும் குறிப்பதை அறிகிறோம். இதை பின்வரும் வசனத்தில் உறுதிப்படுத்திக் கொள்ளலாம் -

**அப்போஸ்தலர் 17:26**

**"மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின்மீதெங்கும் குடியிருக்கச்செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்"**


ஏதேனிலிருந்து வந்த நதியாகிய இந்த நிழல் எதைக்குறிக்கிறது? பின்னாளில் மனித ஜாதியிலிருந்து உருவாகும் நான்கு வகுப்பாரை நிழலாக சித்தரிப்பதை நாம் காணலாம். அது எப்பொழுது சம்பவிக்கும்? இதைக்குறித்த தேவனுடைய தெய்வீகத் திட்டத்தைப்பற்றி நாம் வாசிப்போம் -



**1கொரிந்தியர் 15:21,22**

**"மனுஷனால் மரணம் உண்டானபடியால் மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்"**

இன்று முழு மனித ஜாதியும், ஆதிப்பெற்றோராகிய ஆதாம் ஏவாளிடமிருந்து சுதந்தரித்த பாவம், மரண சாபத்தில் மரிக்கிறார்கள். இவர்கள் கல்வாரியில் இயேசுவின் மரணத்தின்மூலம் மீட்கப்பட்டு, மீண்டும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். இந்த உயிர்த்தெழுதல் எவ்வாறு நடைபெறும்? இதனைவிளக்குவதற்கு பவுல் அப்போஸ்தலன், விதையை உதாரணமாகக் கூறியிருக்கிறார். விதையானது தான் மரித்தபிறகே புதிய மேனியை வெளிக்கொணர்கிறது. அதுபோலவே மரித்தோரின் உயிர்த்தெழுதலும் இருக்கும் என்கிறார்.



**1கொரிந்தியர் 15:36-38**

**"புத்தியீனனே, நீ விதைக்கிற விதை செத்தாலொழிய உயிர்ப்பிக்கமாட்டாதே. நீ விதைக்கிறபோது, இனி உண்டாகும் மேனியை விதையாமல், கோதுமை அல்லது மற்றொரு தானியத்தினுடைய வெறும் விதையையே விதைக்கிறாய்.அதற்கு தேவன் தமது சித்தத்தின்படியே மேனியைக் கொடுக்கிறார். விதை வகைகள் ஒவ்வொன்றிற்கும் அததற்கேற்ற மேனியையே கொடுக்கிறார்.. வானத்திற்குரிய மேனிகளுமுண்டு, பூமிக்குரிய மேனிகளுமுண்டு. வானத்திற்குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே, பூமிக்குரிய மகிமையும் வேறே..மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும். அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும்"**

மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுவதைக்குறித்த இந்த மாபெரும் சத்தியத்தை வேத வசனம் நமக்குப் போதிக்கிறது. இதைக்குறித்து பழையஏற்பாட்டில்,

**சங்கீதம் 90: 3**

**"நீர் மனுஷரை நிர்த்தூளியாக்கி(மரணம்) மனுபுத்திரரே, திரும்புங்கள் (உயிர்த்தெழுதல்) என்கிறீர்"**

## நான்கு ஆறுகள்

இந்த நதியிலிருந்து நான்கு ஆறுகள் பிரிவதை வசனத்தில் பார்க்கிறோம்

**ஆதியாகமம் 2: 10**

**" ஏதேனிலிருந்து ஒரு பெரிய நதி அங்கேயிருந்து பிரிந்து நாலு பெரிய ஆறுகளாயிற்று"**

இது எதைக் குறிக்கிறதென்றால், ஆதாமிலிருந்து உயிர்பெற்று வரப்போகும் சந்ததிகள் தேவனுடைய தெய்வீக திட்டத்தில் 4 பிரிவுகளாக இருப்பதை அடையாளப்படுத்துகிறது. இதைக்குறித்து வேதத்தில் பார்க்கும்போது,

**1கொரிந்தியர் 15:23**

**"அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான். முதற்பலனானவர் கிறிஸ்து. பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள்.**

இந்த வசனத்தில் அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான் என்பதில், அந்த வரிசையைக் குறித்து ஆராயவிருக்கிறோம். அதாவது இந்த நான்கு ஆறுகளை இந்த உயிர்த்தெழும் வரிசைக்கு ஒப்பிடலாம். இந்த நான்கு வரிசை என்னவென்று பார்க்கும்போது, இது இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையில், அதாவது மூன்றாம் உலகத்தில் அதாவது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் ஆயிரவருட அரசாட்சியில் நடைபெறும் காரியங்கள் ஆகும். இப்போது இந்த நான்கு வரிசைகளைக் குறித்து பார்க்கலாம்.

## முதலாவது ஆறு - பைசோன்


**ஆதியாகமம் 2:11**

**"முதலாம் ஆற்றுக்குப் பைசோன் என்று பெயர். அது ஆவிலா தேசம் முழுவதையும் சுற்றி ஓடும். அவ்விடத்திலே பொன் விளையும்.."**

நாம் ஏற்கனவே அறிந்திருக்கிறபடி, இந்த முதலாம் ஆறு முதலாம் உயிர்த்தெழுதலை அடையப்போகும் வகுப்பார் குறித்து பேசுகிறது. இந்த வசனத்தில் உள்ள பொன் எதைக்குறிக்கிறதென்றால், திவ்ய சுபாவத்தையே ஆகும். நாம் ஆசரிப்புக் கூடாரத்தில் பரிசுத்த ஸ்தலம் மற்றும் மகா பரிசுத்த ஸ்தலத்தைக் குறித்து பார்க்கும்போது, இங்குள்ள பொருட்கள் பொன்னினால் செய்யப்பட்டது என்று பார்க்கிறோம்.

**யாத்திராகமம் 25:11,12,24,31**

**" சித்தீம் மரத்தினால் ஒரு பெட்டியை பண்ணக்கடவர்கள்..அதை எங்கும் பசும்பொன் தகட்டால் மூடுவாயாக. நீ அதின் உட்புறத்தையும் வெளிப்புறத்தையும் அதினால் மூடி,அதின்மேல் சுற்றிலும் பொன்னினால் திரணையை உண்டாக்கி, அதற்கு நாலு பொன் வளையங்களை வார்ப்பித்து.. பசும்பொன்னினால் ஒரு குத்துவிளக்கையும்**



**உண்டாக்குவாயாக.அதுபொன்னினால் அடிப்புவேலையாய்ச் செய்யப்படவேண்டும். அதின் தண்டும் கிளைகளும் மொக்குகளும் பழங்களும் பூக்களும் பொன்னினால் செய்யப்படவேண்டும்''**




ஆகவே இந்த முதலாம் ஆறு பைசோன் என்பது, தெய்வீக சுபாவத்தை பெறப்போகும் முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குபெறப் போகிறவர்களைக் குறிக்கிறது.

**வெளிப்படுத்தல் 20:6**

**''முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்''**

அதோடு இவர்களின் உயிர்த்தெழுதலின் ஆசீர்வாதத்தை நாம் **தேவனுடைய தெய்வீகத்திட்ட வரைபடத்தில் 'K'** என்று இவர்களை **அழியாமை சுபாவத்திற்கு** தகுதிப்படுத்துவதைப் பார்க்கிறோம். மேலும் இந்த வகுப்பை (பைசோன் ஆறு) சேர்ந்தவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள வாக்குத்தத்தத்தை வசனத்தில் வாசிக்கிறோம் -




**ரோமர் 2:7 ''சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார்''**

மேலும **2பேதுரு 1:4 ''இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத்தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு..''**

**லூக்கா 12:32 "பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்"**

**யாக்கோபு 1:18 "அவர் சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில் நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய வசனத்தினாலே ஜெனிப்பித்தார்"**

இவர்களின் தொகை 1,44,000பேர் என வாசிக்கிறோம் -

**வெளிப்படுத்தல் 14:1 / 7:4 "பின்பு நான் பார்த்தபோது, இதோ, சீயோன் மலையின்மேல் ஆட்டுக்குட்டியானவரையும், அவரோடேகூட அவருடைய பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்டிருந்த இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேரையும் நிற்கக்கண்டேன்"**

இவர்கள் பூமியில் உள்ள எல்லா ஜாதிகளிலுமிருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறதாக வேத வசனம் கூறுகிறது -

**வெளிப்படுத்தல் 5:9 "..நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களை தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு.."**

இதைக் குறித்து இயேசுவும் சீஷர்களுக்கு கூறினதை வாசிப்போம்

**அப்போஸ்தலர் 1: 8 "பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும் யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்"**

இவ்வகுப்பார் , விசுவாசம் கீழ்ப்படிதல் மற்றும் குணலட்சணங்களில் வளர்ச்சியடைந்து, முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவர்களாகின்றனர். இவர்கள் சாதகமற்ற சூழ்நிலையில் , இவ்வுலகம் குருடாக்கப்பட்டு இருளில் மூழ்கியிருந்த சூழ்நிலையில், இந்த மகா உன்னதமான ஜீவநிலையை அடைகின்றனர்.

இப்போது இரண்டாம் ஆறு எந்த வகுப்பாரைக் குறிக்கிறது என்று பார்க்கலாம்.

## இரண்டாவது ஆறு - கீகோன்



**ஆதியாகமம் 2:13**

**"இரண்டாம் ஆற்றுக்குக் கீகோன் என்று பேர். அது எத்தியோப்பியா தேசம் முழுவதையும் சுற்றி ஓடும் "**

இந்த வசனத்தின் மூலமாக இரண்டாம் ஆறு கீகோன் எத்தியோப்பியா தேசம் முழுவதையும் சுற்றி ஓடும் என்று பார்க்கிறோம். இந்த எத்தியோப்பியா தேசம் எதை அடையாளப்படுத்துகிறது என்று பார்க்கலாம்.

**எத்தியோப்பியா தேசம்**

இந்த எத்தியோப்பியா தேசம், ஆப்பிரிக்கா தேசத்தில் உள்ளது. இது "நீக்ரோ"




இனத்தவர்கள் வசிக்கும் பகுதி. இவர்கள் சபிக்கப்பட்ட சந்ததி என்பதை நாம் கடந்த பாடங்களில் பார்த்திருக்கிறோம்

**ஆதியாகமம் 9:24,25**

**"நோவா .. தன் இளையகுமாரன் தனக்கு செய்ததை அறிந்து : கானான் சபிக்கப்பட்டவன், தன்சகோதரரிடத்தில் அடிமைகளுக்கு அடிமையாயிருப்பான் என்றான்"**

இவர்களின் சாபம் " அடிமைகளுக்கு அடிமை"

ஆக இந்த இரண்டாவது ஆறு "கீகோன்". ஆதாமிலிருந்து வந்த சந்ததியில் எந்த வகுப்பினருக்கு அடையாளமாக இது இருக்கிறது என்று பார்க்கும்போது, உயிர்த்தெழுதலில் இரண்டாம் பாகத்தை அடைகிறவர்கள். இவர்கள் முதலாம் உயிர்த்தெழுதலில் வந்தவர்களுக்கு சேவை செய்கிறவர்கள் (வேலையாட்கள்). யார் இவர்கள் என்று வேதத்தில் பார்க்கும்போது,

**வெளிப்படுத்தல் 7: 9**

**"இவைகளுக்குப் பின்பு, நான் பார்த்தவாறு, இதோ சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள். வெள்ளை அங்கிகளை தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன்"**



இவர்கள் திரள் கூட்டத்தார், சிங்காசனத்திற்கு முன்பாக ஊழியக்காரர்களாக நிற்கிறார்கள் என்று பார்க்கிறோம்.

**வெளிப்படுத்தல் 7:15**

**"இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்குமுன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள்"**

எதற்காக?

தேவனுடைய ஆலயத்தில் இரவு பகலாக சேவை செய்ய இவர்கள் அழைக்கப்பட்டு, தெரிந்துகொள்ளப்பட்டு ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள், இரண்டாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவர்கள்.

இவர்களைக் குறித்து வேதம் கூறும்போது,

**விசுவாசத்தில் உண்மையில்லாதவர்கள். பந்தயப் பொருளை தவறவிட்டவர்கள்.**

**1கொரிந்தியர் 3:15** **"ஒருவன் கட்டினது வெந்துபோனால், அவன் நஷ்டமடைவான். அவனோ இரட்சிக்கப்படுவான். அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினதுபோலிருக்கும்"**

**எரேமியா 8:20** **"அறுப்புக்காலம் சென்றது. கோடைக்காலமும் முடிந்தது. நாமோ இரட்சிக்கப்படவில்லை"**



இவர்கள் சபையாகிய மணவாட்டியின் தோழி வகுப்பார்.

**சங்கீதம் 45:14**

**"..அவள்(மணவாட்டி) பின்னாலே செல்லும் அவளுடைய தோழிகளாகிய கன்னிகைகள் உம்மிடத்தில் கூட்டிக்கொண்டு வரப்படுவார்கள்"**

இவர்கள் தேவனுடைய ராஜ்ஜியத்தில் தீமை நடைபெறாவண்ணம் மக்களை நல்வழிப்படுத்த ஒரு பாதுகாவலர்கள்போல செயல்படுவார்கள். இந்த வகுப்பாரின் உயிர்த்தெழுதல் பரலோகத்திற்குரியதாக இருந்தாலும், தெய்வீக சுபாவத்திற்கு உரியதல்ல. அழியக்கூடிய ஆவிக்குரிய ஜீவிகளாகிய, தூதர்களுடைய சுபாவத்தைக் கொண்டதாக இருக்கும். இவர்கள் யாக்கோபின் சொப்பனத்தில் காண்பிக்கப்பட்டபடி, ஆவிக்குரிய அரசாட்சி மற்றும் பூமிக்குரிய அரசாட்சிக்கு இடையில், கிறிஸ்துவிடமிருந்து முற்பிதாக்களுக்கு செய்திகளை எடுத்துச்செல்லும் ஊழியத்தைச் செய்வர்.

**ஏசாயா 30:21**

**"நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும், இடதுபுறமாய்ச் சாயும்போதும் : வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்கு பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்"**

தேவனுடைய ராஜ்ஜியத்தில் மக்கள் தவறு செய்யாவண்ணம் மேற்கூறிய வசனத்தின்படி இவ்வகுப்பார் செயல்படுவார்கள். இந்த வகுப்பார் செய்யும் மற்றொரு ஊழியத்தை பின்வரும் வசனத்தில் காண்போம் -


**ஏசாயா 11: 9**

**"என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்கு செய்வாருமில்லை, கேடு செய்வாருமில்லை. சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்"**

தேவனுடைய இராஜ்யத்தில் காவல்துறையானது மனிதரைக்கொண்டு இயங்காமல், கண்ணுக்குப் புலப்படாத ஆவிக்குரிய ஜீவிகளைக்கொண்டு இயங்கும்.

இவர்கள் தங்கள் வல்லமையைப் பயன்படுத்தி, தீமை சிந்தனை வடிவில் இருக்கும்போதே, எச்சரித்து கட்டுப்படுத்துவார்கள். ஆனால் போகப்போக , குற்றம் செய்பவர் கேட்கும்வண்ணம், "வழிநடத்தும் சத்தம்" மாத்திரம் போதுமானதாயிருந்து அவர்களை கட்டுப்படுத்தும்.

அடுத்ததாக நாம் மூன்றாம் ஆறு குறித்தும், அது எந்த வகுப்பாரைக் குறிக்கிறது என்றும் பார்க்கலாம்.



## மூன்றாவது ஆறு - இதெக்கேல்

**ஆதியாகமம் 2:14**

**"மூன்றாவது ஆற்றுக்கு இதெக்கேல்(டைகிரிஸ்) என்று**

**பெயர். அது அசீரியாவுக்குக் கிழக்கே ஓடும்''**

மூன்றாம் ஆறாகிய இதெக்கேல் அசீரியாவுக்கு கிழக்கே ஓடும் என்று பார்க்கிறோம். இந்த அசீரியா மெசொப்பொத்தாமியாவைக் குறிக்கிறது. மெசொப்பொத்தாமியாவில் யார் இருந்தது என்று பார்க்கும்போது,

**அப்போஸ்தலர் 7:2**

**''.. நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் காரானூரிலே குடியிருக்கிறதற்கு முன்னமே மெசொப்பொத்தாமியா நாட்டிலே இருக்கும்போது ..''**

இந்த மெசொப்பொத்தாமியாவில் (அசீரியா) முற்பிதாவாகிய ஆபிரகாம் இருந்ததாக பார்க்கிறோம். ஆகவே இந்த மூன்றாம் ஆறாகிய இதெக்கேல்(டைகிரீஸ் என்றும் சொல்லலாம்) எதற்கு அடையாளமாக இருக்கிறது என்று பார்க்கும்போது,

மூன்றாம் உயிர்த்தெழுதலுக்கு பங்குள்ளவர்களுக்கு அடையாளமாக இருக்கிறது. இந்த உயிர்த்தெழுதலில் முற்பிதாவாகிய ஆபிரகாம் பங்கு பெறுகிறார். மேலும் இதில் யாரெல்லாம் பங்கு பெறுகிறார்கள் என்று பார்க்கும்போது, அவர்களைக் குறித்த விபரம் எபிரேயர் 11ம் அதிகாரத்தில் உள்ளது. இவர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன் தேவன்மேல் விசுவாசமுள்ளவர்களாய் ஜீவித்தவர்கள். இவர்கள் ஆபேல் முதல் யோவான் ஸ்நானகன் வரை உள்ள பழைய ஏற்பாட்டு விசுவாசிகள்.

**எபிரேயர் 11:1,2 ''விசுவாசத்தினாலே ..முன்னோர்கள் நற்சாட்சி பெற்றார்கள்''**

- ⇨ இவர்களுக்கு மேன்மையான உயிர்த்தெழுதல் உண்டு என்று வாசிக்கிறோம் -


**எபிரேயர் 11:35 ''வேறுசிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு..''**

- ⇨ இவர்கள் ''நம்மையல்லாமல் பூரணராகாதபடி'' -இது திவ்ய சுபாவத்தில் பூரணப்படும் சபை வகுப்பார் ஆவர்.


ஆபேல்



யோவான் ஸ்நானன்



யேசுவின் வளர்ப்புத்தந்தை யோசேப்பு



**சங்கீதம் 45:16 ''உமது பிதாக்களுக்குப் பதிலாக உமது குமாரர் இருப்பார்கள். அவர்களைப் பூமியெங்கும் பிரபுக்களாக வைப்பீர்''**

மோசே, ஆபிரகாம், தானியேல், யோசேப்பு, யோவான் ஸ்நானகன், தாவீது மற்றும் அனைத்து தீர்க்கதரிசிகளும் பூமியின் பிரபுக்களாக இருப்பது நிச்சயம். இதில் யோவான் ஸ்நானகன் கடைசியானவராக இருப்பார்.

இவருக்கு முன்னதாக இருப்பது - இயேசுவின் ஞானஸ்நானத்துக்கு முன்பு மரித்த

அவரது தந்தை யோசேப்பாக இருக்கக்கூடும். இவர் இயேசுபிறந்தபின்பு மரியாளுக்கு துணையாக இருந்து தேவனுக்கு உண்மையுள்ளவராக இருந்தார். அதோடு தனக்கு நிச்சயிக்கப்பட்ட மரியாள் கர்ப்பவதியாக இருப்பதை அறிந்தும் அவளிடம் உண்மையாக இருந்தார்.

அதே சமயம், இயேசுவின் தாய் மரியாள் , பெந்தெகொஸ்தே நாளில், பரிசுத்தஆவியினால் நிரப்பப்பட்டிருந்தபடியால், ஆவிக்குரிய ஆளுகையில் ஒரு அங்கமாக இருப்பார்(அப் 1:14).

**அப்போஸ்தலர் 2:17**

**"கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள். உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள், உங்கள் மூப்பர் சொப்பனங்களைக் காண்பார்கள்"**

இவ்வசனமானது, மனுக்குலத்திற்கான பூமிக்குரிய இரட்சிப்பு நிறைவேறும் காலத்தைக் குறிக்கிறது. **இங்கு மூப்பர், வாலிபர்கள் - தீர்க்கதரிசிகளையும், அவர்களது அனுபவங்களையும் குறிக்கும்.** இராஜ்யத்தைப் பற்றின வாக்குத்தத்தங்கள் அனைத்தும் முற்கால தீர்க்கதரிசிகளுக்கு உண்மையில்லாத சொப்பனங்கள் போன்று காணப்பட்டது.

இதை சில உதாரணங்களை வாசித்து அறியலாம் :

**ஏசாயா 11:6-8**

**"அப்பொழுது ஓநாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும், புலி வெள்ளாட்டுக் குட்டியோடே படுத்துக்கொள்ளும். கன்றுக்குட்டியும், பாலசிங்கமும் காளையும் ஒருமித்திருக்கும், ஒரு சிறுபையன் அவைகளை நடத்துவான். பசுவும் கரடியும் கூடிமேயும், அவைகளின் குட்டிகள் ஒருமித்துப் படுத்துக்கொள்ளும், சிங்கம் மாட்டைப்போல் வைக்கோல் தின்னும். பால் குடிக்குங்குழந்தை விரியன் பாம்பு வளையின்மேல் விளையாடும், பால் மறந்த பிள்ளை கட்டுவிரியன் புற்றிலே தன் கையை வைக்கும்"**

இந்த வார்த்தைகளை ஏசாயா தீர்க்கதரிசி எழுதினபோது, சிங்கமானது மாம்சத்தை உட்கொண்டு, மனிதனையும் பட்சிக்கக் கூடியதாக இருந்தது. ஆடுகள் ஓனானின் வயிற்றில்தான் அப்பொழுது காணப்பட்டிருக்கும். இந்த வார்த்தைகள் அனைத்தும் நம்பமுடியாத சொப்பனமாய் இருந்தது.


"The wolf will live with the lamb..." (Isa. 11:6)







மேலும் **மீகா 4:3** **"அவர் திரளான ஜனங்களுக்குள் நியாயந்தீர்த்து, தூரத்திலுள்ள பலத்த ஜாதிகளைக் கடிந்துகொள்ளுவார். அப்பொழுது தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள், ஒரு**

**ஜாதிக்கு விரோதமாய் மறுஜாதி பட்டயம் எடுப்பதில்லை, இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை''**

தேவஇராஜ்யம் இப்பூமியில் ஸ்தாபிக்கப்படும்போது, யுத்தங்கள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, பாதுகாப்பு ஏற்படுத்தப்படுவதை மீகா தீர்க்கதரிசி முன்னுரைத்தார். ஆனால் இந்த வார்த்தைகளை மீகா எழுதினபோது எல்லாப் பக்கத்திலும் யுத்தம் சம்பவித்திருந்தது. இவ்வார்த்தைகள் அப்போது நம்ப முடியாத கனவாய் இருந்தது.

மேலும் **எரேமியா 16:19-21** **"என் பெலனும் , என் கோட்டையும், நெருக்கப்படுகிற நாளில் என் அடைக்கலமுமாகிய கர்த்தாவே, புறஜாதிகள் பூமியின் கடையாந்தரங்களிலிருந்து உம்மிடத்தில் வந்து - மெய்யாகவே, எங்கள் பிதாக்கள் பிரயோஜனமில்லாத பொய்யையும் மாயையும் கைப்பற்றினார்கள் என்பார்கள். மனுஷன் தனக்கு தேவர்களை உண்டுபண்ணலாமோ? அவைகள் தேவர்கள் அல்லவே. ஆதலால், இதோ, இப்பொழுது நான் அவர்களுக்குத் தெரியப்பண்ணுவேன், என் கரத்தையும் என் பெலத்தையுமே அவர்களுக்குத் தெரியப்பண்ணுவேன், என் நாமம் யேகோவா என்று அறிந்துகொள்வார்கள்''**

இங்கு எரேமியா தீர்க்கதரிசி கூறுகையில், உலகமெங்கும் உள்ள புறஜாதிகள் அவர்களது விக்கிரக வணக்கத்தைவிட்டு, மனந்திரும்பி, கர்த்தரிடம் சேருவர் என்கிறார். ஆனால் இதனை எழுதினபோது இவ்வார்த்தைகள் நம்பமுடியாத கனவாகவே இருந்தது.

**"உங்கள் வாலிபர் தரிசனங்களை அடைவார்கள்''** - அந்த தீர்க்கதரிசிகள் மேன்மையான உயிர்த்தெழுதலில் பரிபூரண மனிதர்களாக வருவர்.

இவர்கள் வாலிபர்கள் என்றழைக்கக் காரணம் என்ன?

மாம்சத்தில் பூரணர்களாகி, இவர்களது சரீரம் வாலிபனின் வாலவயதுபோல் இருக்கும்

**யோபு 33:25**

**''அப்பொழுது அவன் மாம்சம் வாலிபத்தில் இருந்ததைப் பார்க்கிலும் ஆரோக்கியமடையும், தம் வாலவயது நாட்களுக்குத் திரும்புவான்''**

அடுத்ததாக நான்காவது ஆறு குறித்துப் பார்க்கலாம் :

## நான்காவது ஆறு - ஐபிராத்து

**ஆதியாகமம் 2:14** **"நாலாம் ஆற்றுக்கு ஐபிராத்து என்று பேர்''**

இந்த நாலாம் ஆறான ஐபிராத்து எங்கிருந்து புறப்படுகிறது? எங்கே போய் சேருகிறது என்ற எந்த விபரமும் குறிப்பிடப்படவில்லை. இது எதைக் குறிக்கிறதென்றால், ஆதாமின் முழு சந்ததியில் மீதி உள்ள(சபை வகுப்பார், தெரிந்துகொள்ளப்பட்டோர், முற்பிதாக்கள் போக மீதி உள்ள) உலக ஜனங்களை குறிக்கிறது. இந்த வகுப்பார் ஆதாமின் சந்ததியில், பொதுவான இரட்சிப்பை(யூதா 3) சுதந்தரிப்பவர்களைக் குறிக்கும்.



இவர்களின் உயிர்த்தெழுதலின் வரிசை நான்காவது இடம். இது அனைவருக்கும் பொதுவானது. இந்த உயிர்த்தெழுதலில் அவர்கள் எந்த நிலையில் - அதாவது எந்த மனநிலையில், குணாதிசயத்தில் மரித்தார்களோ, அதே நிலையில் எழுந்துவருவர். அவர்கள் உயிர்த்தெழும் சரீர நிலைமையைப் பொறுத்தமட்டில், அங்கவீனமில்லாத முழுமையான சரீரத்தில் வருவார்கள். மாறாக, பார்வையற்ற, செவிட்டுத் தன்மையுள்ள, ஊனமுற்ற, வாய்பேச முடியாத, அங்கவீனத்தோடு எழுந்துவரமாட்டார்கள். இது பின்வரும் வசனத்தில் தெளிவாக கூறப்பட்டுள்ளது :

**யோபு 19:26,27**

**"இந்த தோல் முதலானவை அழுகிப்போனபின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன். அவரை நானே பார்ப்பேன், அந்நியக் கண்கள் அல்ல, என் கண்களே அவரைக் காணும். இந்த வாஞ்சையால் என் உள்ளிந்திரியங்கள் எனக்குள் சோர்ந்து போகிறது"**

அப்பொழுது அவரவர்சுயமாக அடையாளங்கண்டு கொள்வார்கள். இவ்வாறு முன்பிருந்த பாவம் மற்றும் அபூரணநிலையில் உயிர்த்தெழுந்து வந்தாலும், பரிசுத்த வழியாகிய பெரும்பாதையில் நடந்து, மனந்திரும்புதல், சீர்பொருந்துதல், சத்தியத்துக்குக் கீழ்ப்படிதல் மூலம், மாம்சீக பரிபூரணத்தை படிப்படியாக பெற்றுக்கொள்வர்.

**ஏசாயா 35:8-10**

**"அங்கே பெரும்பாதையான வழியும் இருக்கும். அது பரிசுத்தவழி எனப்படும், தீட்டுள்ளவன் அதிலே நடந்துவருவதில்லை, அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசைகெட்டுப் போவதில்லை. அங்கே சிங்கம் இருப்பதில்லை, துஷ்டமிருகம் அங்கே போவதுமில்லை. அங்கே காணப்படவு மாட்டாது, மீட்கப்பட்டவர்களே அதில் நடப்பார்கள். கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்தக் களிப்புடன் பாடி, சீயோனுக்கு வருவார்கள், நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின் மேலிருக்கும், சந்தோஷமும் தவிப்பும் ஓடிப்போம்"**

ஒருவர் தன் வாலிப நாட்களுக்குத் திரும்புவது என்பது, வயது சென்று மரிக்கும் முறையானது தலைகீழாக திருப்பப்படுவதைக் குறிக்கும்.

ஆனால் இந்த வகுப்பாரின் மத்தியிலும் மனந்திரும்பாத வகுப்பார் இருப்பார்கள் -

**ஏசாயா 26:10**

**"துன்மார்க்கனுக்குத் தயைசெய்தாலும் நீதியைக் கற்றுக்கொள்ளான், நீதியுள்ள தேசத்திலும் அவன் அநியாயஞ்செய்து கர்த்தருடைய மகத்துவத்தைக் கவனியாதே போகிறான்"**

இவர்கள் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுப்பப்பட்டிருந்தாலும், தேவனுடைய கிருபையை மறுதலித்து, மனந்திரும்ப மறுத்து, தேவனுக்கும் தேவநீதிக்கும் எதிராளிகளாக மாறும் துணிகரமான பாவிகள் ஆவர்.
இவர்கள் இரண்டாம் மரணத்தை அடைந்து நித்திய அழிவுக்கு செல்கிறார்கள்.

இறுதியாக, இந்த வரைபடத்தில் நாம் காண்கிற '**A**' மற்றும் '**B**' பாகங்கள் இரண்டும் இரு ஆறுகளைக் கொண்டுள்ளது.

இதில் ‘A’ பாகத்தில் இருக்கும் பைசோன், கீகோன் ஆகிய ஆறுகள் இப்பொழுது பூமியிலிருந்து மறைந்துவிட்டன. அவைகள் வற்றிப்போன ஆறுகளாயின. ஆனால் இதக்கேல்(டைகிரிஸ் என்றழைக்கப்படுகிறது) மற்றும் ஐபிராத்து ஆறுகள் இன்றும் ஈராக்கு தேசத்தில் ஓடுகின்றன. இந்த இருபாகங்களும் தேவனிடத்திலிருந்து வரும் இருவித இரட்சிப்பாகிய பரலோகம் மற்றும் பூமிக்குரிய இரட்சிப்பைக் குறிக்கிறது.

**முதல் இரண்டு ஆறுகள் - பரலோகத்திற்குரிய இரட்சிப்பைப் பெறுகிறவர்கள்**

**கடைசி இரண்டு ஆறுகள் - பூமிக்குரிய இரட்சிப்பை பெறுகிறவர்கள்**
இவர்களின் உயிர்த்தெழுதல் மூன்றாம் வழி திறந்தவுடன் நடைபெறும். இதுவும் படிப்படியாக நடந்துமுடியும்.

ஆகவே நாம் இன்று ஏதேனிலிருந்து புறப்பட்டு நான்கு ஆறுகளாக பிரிந்த ஆறுகளில், தேவனுடைய மாபெரும் தெய்வீகத் திட்டம் அடங்கியிருப்பதன் சத்தியத்தை அறிந்துகொண்டோம்.

**தேவகிருபை நம் அனைவரோடும் இருப்பதாக ஆமென்.**